<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No. 484/2024</u>

<u>வழக்கு சாட்சி PW–1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தங்கம் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சூரியகுமார் | தொழில் | : | கவுன்சிலர் |
| கிராமம் | : | பாப்பான்குளம் | வயது | : | 41 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 05.03.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் பாப்பான்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பாப்பான்குளம் பஞ்சாயத்து கவுன்சிலராக பணியாற்றி வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். 02.09.2023 அன்று காலை 10.00 மணியளவில் என்னுடைய ஸ்கூட்டியில் கடையம் யூனியனில் கவுன்சிலர் மீட்டிங்கிற்கு சென்று கொண்டிருந்தேன். என்னுடைய கணவர் டிராக்டர் வைத்துள்ளார். எதிரி பரமசிவனும், டிராக்டர் வைத்துள்ளார். ஏற்கனவே எதிரி பரமசிவன் எங்கள் வீட்டிற்கு வந்து என் கணவரிடம் பேசுவார். பரமசிவன் என்னுடைய கணவர் இல்லாத நேரத்திலும் வந்து பேசுவார். அது எனக்கும், என்னுடைய மகளுக்கும் பிடிக்கவில்லை. நான் கையெழுத்து போட்டு கொடுத்ததாக போலி பத்திரத்தை வைத்து எதிரி பரமசிவன் உரிமையியல் வழக்கு அம்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அது நிலுவையில் இருந்து வந்தது. என்னுடைய கையெழுத்தை போலியாக போட்டு வழக்கு தாக்கல் செய்ததினால் காவல்நிலையத்தில் நான் புகார்

கொடுத்தேன். பின்னர் டி.எஸ்.பி அலுவலகத்தில் அந்த புகாரை விசாரிக்க அனுப்பினார்கள். டி.எஸ்.பி அலுவலகத்தில் எதிரிகள் தயார் செய்த பத்திரம் போலி என தெரிய வந்தது.

எதிரி பரமசிவனை டி.எஸ்.பி அலுவலகத்தில் என்னுடன் எந்த பிரச்சனையும் செய்யக்கூடாது என்று கண்டித்து அனுப்பினார்கள். இவ்வாறு எதிரிகளுக்கு என்னுடன் முன்விரோதம் இருந்து வந்தது. இந்நிலையில் 02.09.2023 அன்று காலை 10.00 மணிக்கு நான் கடையம் யூனியனில் மீட்டிங்கிற்கு கிளம்பினேன். எங்கள் ஊர் குளக்கரையில் வைத்து எதிரி முத்துலட்சுமியும், நயினாரும் என்னை அசிங்கமான வார்ததைகளினால் தேவடியா ஊர் மேய போகிறாய், என்று பேசினார்கள். விவசாயம் செய்யும் நபர்கள் அங்கு வந்தவுடன் எதிரி முத்துலட்சுமியும், நயினாரும் சென்றார்கள். அப்போது அவர்கள் என் தம்பியை வைத்து உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று கூறிவிட்டு சென்றார்கள்.

நான் அதனை பெரிசு படுத்தாமல் யூனியன் மீட்டிங்கிற்கு சென்றேன். மீட்டிங் மாலை 05.00 மணிக்கு முடிந்தது. நான் 06.00 மணியளவில் கடையத்திலிருந்து மீட்டிங் முடித்து வீட்டிற்கு ஸ்கூட்டியில் கிளம்பினேன். வெள்ளிக்குளம் தாண்டி ஒரு அய்யாக்கோவில் அருகே வரும்போது அதில் ஒரு மண்ரோடு உள்ளது. அதில் நான் சென்றுகொண்டிருக்கும்போது எதிரி பரமசிவம் நம்பர் பிளேட் இல்லாத சிவப்பு கலர் ேஹாண்டா வண்டியில் வந்து என்னை வழிமறித்தார். உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசினார்.

அவருடைய பைக் டேங்க் கவரில் இருந்து ஒரு பெரிய கத்தியை எடுத்து என்னுடைய தலையின் இருபுறங்களிலும் வெட்டினார். கூதிமவளே இனிமேலும் உன்னை உயிரோடு விடமுடியாது எனக்கூறி வெட்டினார். நான் என்னுடைய கணவருக்கு போன் செய்ய முயன்றேன். போனை எதிரி பரமசிவன் பிடுங்கினார். நீ எவனுக்கு போன் செய்தாலும், ஒன்னும் செய்ய முடியாது, என்று சொல்லி மீண்டும் என்னுடைய இடது தோள்பட்டையிலும், என்னுடைய நாடியின் இருபுறமும், இடது கை மணிக்கட்டிலும், இடது முழங்கையிலும், வலது தோள்பட்டையிலும், கன்னத்திலும், வலது கையிலும், என்னுடைய வயிற்றிலும், நெஞ்சுப்பகுதியிலும் நிறைய குத்துக்கள் குத்தினார். என்னுடைய உடம்பு முழுவதும் கத்தியால் வெட்டவும், குத்தவும் செய்தார். நான் தப்பியோட முயற்சித்தபோது என்னுடைய முதுகில் குத்தினார். என்னுடைய இரண்டு கை விரல்களிலும் குத்தினார். என்னை மிதித்து பள்ளத்தில் தள்ளினார்.

என்னை எதிரி பரமசிவன் இவ்வாறு செய்ததினால் நான் பயந்து போய் உருண்டு ரோட்டில் வந்து படுத்து விட்டேன். பக்கத்து ஊரில் உள்ள 4, 5 நபர்கள் அப்போது அங்கு வந்தார்கள். எதிரி பரமசிவனை பிடிக்க முயற்சி செய்தார்கள். எதிரி பரமசிவன் பைக்கை போட்டு விட்டு, செருப்பையும் அங்கேயே விட்டு விட்டு ஓடி விட்டார். என்னுடைய செல்போனை எதிரி பரமசிவன் எடுத்து சென்று விட்டார்.

பின்னர் 108 ஆம்புலன்ஸிற்கு யாரோ போன் செய்தார்கள். 108 ஆம்புலன்ஸ் வந்தது. எனது தம்பியும் சிறிது நேரத்தில் வந்தார். என்னுடைய தம்பி என்னை ஆம்புலன்ஸில் ஏற்றி தென்காசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தார்கள். என்னுடைய உடம்பில் உள்ள

சில காயங்களில் தையல் போட்டார்கள். பின்னர் என்னை ஐகிரவுண்ட் மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். அங்கு ஒரு வாரம் சிகிச்சை எடுத்து விட்டு இறந்து போவார், கொண்டு செல்லுங்கள் என்று கூறினார்கள். திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் 15 நாட்கள் சிகிச்சை எடுத்து விட்டு, பின்னர் முத்து தனியார் மருத்துவமனைக்கு என்னை மேல்சிகிச்சைக்காக கொண்டு சென்றார்கள். அங்கு சுமார் 15 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். பின்னர் 3 மாதங்கள் வீட்டில் இரண்டு நர்ஸ் வந்து என்னுடைய காயத்திற்கு கட்டு போட்டு சிகிச்சை அளித்தார்கள். (சாட்சி அவருடைய உடம்பில் பல இடங்களில் இருந்த காயத்தழும்புகளை காண்பித்தார்.).

என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்தை ஒரு பெண் போலீசார் வாக்குமூலம் பெறும்போது, ஆம்புலன்ஸில் வைத்து போட்டுக்கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.06 18:42:40 +0530

<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 484/2024</u>
<u>வழக்கு சாட்சி PW-2</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விஜயகுமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சூரியகுமார் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | பாப்பான்குளம் | வயது | : | 38 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 05.03.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் பாப்பான்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 தங்கம் என்னுடைய அக்கா. 02.09.2023 அன்று சாயுங்காலம் 06.30 மணியளவில் என்னுடைய மச்சான் ராமகிருஷ்ணன் என்னிடம் "உன்னுடைய அக்காவிற்கு ஏதோ பிரச்சனை போல் இருக்கிறது, பதற்றத்தில் என்னிடம் பேசினார். பாப்பாக்குளம் – கடையம் ரோட்டில் வந்து கொண்டிருக்கிறார், நீ போய் பார்" என்று சொன்னார்.

நான் வெள்ளிக்குளம் அய்யாக்கோவில் அருகே வந்து பார்த்தபோது, என்னுடைய அக்கா இரத்தவெள்ளத்தில் கிடந்தார். அவருடைய முதுகு, தலை, 2 கைகள், வயிறு, நெஞ்சுப்பகுதி ஆகிய இடங்களில் காயம் இருந்தது. அங்கிருந்தவர்கள் ஆம்புலன்ஸிற்கு போன் செய்திருந்தார்கள். ஆம்புலன்ஸ் வந்தது, நான் அவரை தென்காசி அரசு மருத்துவமனைக்கு

கொண்டு வந்தேன். அங்கு முதலுதவி சிகிச்சை அளித்து விட்டு பின்னர் மேல்சிகிச்சைக்காக ஐகிரவுண்ட் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு எனது அக்கா 10 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். பின்னர் முத்து தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு 12 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அதனை நான் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வைத்து போட்டு கொடுத்தேன். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.06 18:42:49 +0530

<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No. 484/2024</u>

<u>வழக்கு சாட்சி PW-3</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தினேஷ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முருகன் | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | முத்தம்மாள்புரம் | வயது | : | 32 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 05.03.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் முத்தம்மாள்புரம் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 தங்கம் என்னுடைய தூரத்து உறவினர். 9 வது மாதம், 2023ம் ஆண்டு சாயங்காலம் 07.30 மணியளவில் நான் வேலைக்கு போய் விட்டு திரும்ப வெள்ளிக்குளத்திற்கு கீழ்புறம் வரும்போது ரோட்டோரம் ஒரு பைக் நின்றது. 6, 7 நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். நாங்கள் 5 நபர்கள் கான்கிரிட் வேலை செய்து விட்டு வந்து கொண்டிருந்தோம். நான் பார்த்தபோது, தங்கம் என்பவர் உடம்பு முழுவதும் இரத்தக்காயங்களுடன் கிடந்தார். நான் அங்கு நின்றவர்களிடம் இவர் பாப்பாங்குளம் கவுன்சிலர் என்று சொன்னேன். அதற்குள் அவரது தம்பியும் வந்து விட்டார். நாங்கள் வந்த குட்டியானையில் வைத்திருந்த தண்ணீரை எடுத்து தங்கத்திற்கு குடிக்க கொடுத்தேன்.

பின்னர் ஆம்புலன்ஸ் வந்தது, ஆம்புலன்ஸில் அவரை ஏற்றி விட்டோம். அவருடன் அவருடைய தம்பியும் ஆம்புலன்ஸில் சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.06 18:42:57 +0530